# தேவன் எவ்வாறானவர் என்பதை இயேசு, கதைகளை பயன்படுத்தி நமக்குக் காட்டினார்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் S7b பாடத்தை வாசிக்கவும்.

## 1. தேவனைப் பற்றி இயேசுவின் கதைகளில் இருந்து அறிந்து கொள்ள உங்கள் இருதயத்தை ஆயத்தப்படுத்துங்கள்.

“அன்பான பிதாவே, உலகத்துக்கு நற்செய்தியைக் கொண்டு வர நீர் இயேசுவை அனுப்பியதற்காக நன்றி. உமது செய்திகளை நாங்கள் புரிந்து கொள்ளுமாறு அவர் கொடுத்த கதைகளுக்காகவும் நன்றி. இந்த அற்புதமான கதைகளை மக்களுக்கு கூற எங்களுக்கு உதவி புரியும்.”



இந்த உலகத்தின் மிகவும் சிறந்த செய்தியாளர் இயேசுவே. சாதாரண மக்களின் அன்றாடக வாழ்க்கை காரியங்களை பிரதிபலிக்கும் உண்மைக் கதைகளையும் உவமைகளையும் அவர் உபயோகித்தார். இயேசு கதைகளை ஏன் உபயோகித்தார் என்றால் அவைகள் மக்கள் புரிந்து கொள்ள எளிதானவை; ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பிறரிடம் பகிர்ந்து கொள்ள சுலபமானவை. அவருடைய கதைகள் சத்தியங்களை உரைத்தன. அவை மிகவும் சிறப்பானவைகளாக இருந்ததால் மக்கள் அவற்றை தங்கள் குடும்பத்தார்களுக்கும் நண்பர்களுக்கும் கூறினர். நற்செய்தி யூதர்களுக்கு இடையில் மிகவும் வேகமாகப் பரவியது. இயேசுவின் கதைகள் நமக்கு வெளிப்படுத்திய சில உண்மைகள் இதோ:

- தேவன் பெரும்பாலும் இரகசியமான வழிகளிலேயே செயல்படுகிறார். இயேசுவின் கதைகள் அந்த இரகசியங்களை மனிதன் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணமாக செடிகளின் வளர்ச்சியோடும் பிற விஷயங்களுடனும் ஒப்பிட்டுக் காட்டின.
- பலவீனமானவர்கள் அல்லது முக்கியமற்றவர்கள் என்ற மக்களைக் கொண்டே தேவன் செயலாற்றுகிறார்.
- பல மத சம்பந்தமான பிரசங்கங்களைப் போல அல்லாமல் இயேசுவின் செய்திகள் புதியனவாகவும் வல்லமையுடையவைகளாகவும் விளங்கின.
- தேவன் நம்மைத் தேடுகிறார் என்று இயேசு நம்மிடம் கூறினார். அவர் நம்மைப் பாவங்களில் இருந்து இரட்சிக்க விரும்புகிறார்.
- நாம் மனமாறி தேவனை நம்பும்போது அவர் நம்மை இயேசுவின் மூலமாக இரட்சிக்கிறார்.
- நாம் ஆற்ற வேண்டிய பணிகளை தேவன் நமக்குக் கூறுகிறார். பயத்தால் அல்ல மகிழ்ச்சியோடு நாம் அவரை சேவிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.
- தமக்கு சேவை செய்பவர்களுக்கு தேவன் மிகுந்த பலனையும், தம்மை நிராகரிப்பவர்களுக்கு தண்டனையையும் அளிப்பார்.

தமது இராஜ்யத்தைப் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்த இயேசு உபயோகித்த ஆறு வகையான கதைகளின் உதாரணங்களைக் கீழே காண்க. ஒவ்வொரு முறையும் ஒரு கதையைப் படிக்கும்போது அதைப் புரிந்து கொள்ள உதவுமாறு தேவனிடம் வேண்டுங்கள். ஒவ்வொரு கதையிலும், தேவனைப் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவும் ஏதோ ஒன்றினையும், அவர் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறார் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

மத்தேயு 13:31-35 ல், கடுகு விதையில் இருந்து நீங்கள் என்ன அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார் என்பதைக் கேளுங்கள்:

- புளித்த மாவும், கடுகு விதையும் எதைக் குறிக்கின்றன?
- தேவ இராஜ்யம் எவ்வாறு தொடங்குகிறது? அது வளரும் போது என்ன நடக்கிறது?

**லூக்கா 5:36–38**ல் ஒரு பழைய வஸ்திரம் மற்றும் பழைய துருத்தியைப் பற்றிய கதைகளைக் காண்க:

- புதிய தையலும், புதிய திராட்சைரசமும் எதைக் குறிக்கின்றன?
- பழைய மதப் பிரசங்கங்களும் இயேசுவின் செய்தியும் எவ்வாறு ஒப்பிடப்படுகின்றன.

தொலைந்து போன நாணயத்தைப் பற்றிய கதையை **லூக் 15:8–10**ல் காண்க.

- பெண்ணும், தொலைந்து போன நாணயமும் யாருக்கு ஒப்பிடப்படுகின்றனர்?
- எவ்வளவு அவசரமாக தேவன் காணாமற் போனவர்களைத் தேடுகிறார்? கண்டுபிடித்தவுடன் என்ன செய்கிறார்?

**லூக் 18:10–14**ல் ஒரு மனந்திரும்பிய ஆயக்காரனின் கதையைக் காண்க.

- பரிசேயர்களின் நடத்தை தேவனுக்கு ஏன் பிரியமாய் இருக்கவில்லை?
- நாம் தேவனை எவ்வாறு அணுக வேண்டும்?

உண்மையுள்ள ஊழியக்காரனின் கதையை **மத்.24:45–51**ல் காண்க.

- உண்மையுள்ள ஊழியக்காரனும் அவனுடைய வேலையும் எதைக் குறிக்கின்றன?
- நாம் என்ன மனநிலையோடு தேவனை சேவிக்க வேண்டும்?

ஒரு கலியாண விருந்து பற்றிய கதையை **மத்.25:1–13**ல் காண்க.

- கிறிஸ்துவை உண்மையோடு சேவிக்கிறவர்களுக்கு என்ன காத்து இருக்கிறது? அவரை சேவிக்கத் தவறியவர்களுக்கு என்ன காத்திருக்கிறது?
- கலியாண விருந்து எதைக் குறிக்கிறது? (உதவிக்கு வெளி.19:1–10 ஐ காண்க)

தேவ உண்மைகளைக் கூற நாமும் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடுகளில் இருந்து கதைகளைக் கூற வேண்டும். இந்தக் கதைகளை வாசிக்கலாம், மனப்பாடமாகக் கூறலாம், பாடலாம், நடிக்கலாம், தொடர் சித்திரங்களாகக் காட்டலாம்.

**2. இந்த வாரத்தில் நடைபெற வேண்டிய காரியங்களை உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

- கிறிஸ்துவை அறியாத மக்களை சந்திக்கவும். அவர்களுடைய தேவைகளைக் குறித்துப் பேசும் பழைய புதிய ஏற்பாடு கதைகளைக் அவர்களுக்குக் கூறவும். அந்தக் கதைகள் கூறும் சத்தியங்களை நீங்களும் கேட்பவர்களும் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்று காட்டுமாறு தேவனிடம் வேண்டவும்.
- சிறுவர்களுக்கு போதிப்பவர்களை சந்தித்து, இயேசு கூறியவைகளையும் மற்றும் பிற வேதாகமக் கதைகளையும் கூறும் வழிகளைத் திட்டமிட உதவவும். பிள்ளைகள் கதைகளை ஒப்புவிக்கலாம், நடிக்கலாம், அல்லது பாடலாம். அவர்கள் படங்கள் வரையட்டும் அல்லது கவிதைகள் எழுதட்டும்.
- பிறருக்கு இயேசுவைப் பற்றி கூறவும் போதிக்கவும் வேதாகமக் கதைகளை எவ்வாறு உபயோகிப்பது என்பது குறித்து உடன் ஊழியர்களுடன் கலந்தாலோசிக்கவும். நற்செய்தியை, உங்கள் கலாச்சார மக்கள் புரிந்து கொள்ள சிறந்த முறையில் உதவி புரியும் கதைகளையே தெரிந்து கொள்க. வேதாகமக் கதைகளைக் கூறும் பயிற்சி பாடங்களையும் சுவிசேஷத்திற்கு உதவும் கருவி நூல்களையும் பயன்படுத்துக.
- தங்கள் நண்பர்களுக்கு வேதாகமக் கதைகளை எவ்வாறு கூறுவது என்பதைக் காட்டவும். ஆராதனையின் போது இதை எவ்வாறு செய்வது என்றும் விளக்கவும். அவர்கள், பாடல், நாடகம், கவிதை, சித்திரம் வாயிலாகக் கதைகளை வழங்கட்டும். கதைகளை சித்தரிக்கும் வண்ணம் கலைத் திறமையுடைய விசுவாசிகள் படங்களை வரைவார்களாக.

## 3. வரும் ஆராதனை வேளையை உடன் ஊழியர்களுடன் கலந்து திட்டமிடவும்.

தற்போதைய தேவைகளுக்கும் வட்டாரப் பழக்கவழக்கங்களுக்கும் பொருத்தமான செயல்பாடுகளைத் தெரிந்து கொள்க.

நீங்கள் படித்த ஒன்று அல்லது இரண்டு இயேசுவின் உவமைகளைக் **கூறவும்** அல்லது நடித்துக் காட்டவும். உங்கள் கலாச்சார மக்களிடையே தற்போது நடைபெற்ற சம்பவங்களாக இவைகள் இருந்தால் அவற்றை எவ்வாறு கூறுவது என்று கற்பனை செய்து பார்க்க மக்களுக்கு உதவுங்கள்.

பகுதி 1ல் (மேலே) நீங்கள் கண்ட விஷயங்களைக் குறித்து கேள்விகள் **கேட்கவும்.** இயேசு தமது கதைகளில் எவ்வாறு தேவனைப் பற்றிய சத்தியங்களை வெளிப்படுத்தினார் என்பதை **விளக்கவும்.** இந்த உண்மைகளில் சிலவற்றை விவரிக்கவும்.

கலியாண விருந்துக்கு சென்ற புத்தியுள்ள புத்தியில்லாத கன்னிகைளைப் பற்றி **மத்தேயு 25:1-13**ல் இயேசு கூறிய கதையைக் கூறி **கர்த்தரின் பந்தியை** அறிமுகப்படுத்தவும். பரலோகத்தில் நமக்குக் கிடைக்கும் பிரதிபலனான மாபெரும் கலியாண விருந்தில் இயேசுவோடு பங்கேற்கும் அனுபவத்தின் சுவையைக் காட்டுவதே கர்த்தரின் பந்தி என்பதை **விளக்கவும்.**

**சிறுவர்கள்** தாங்கள் ஆயத்தம் செய்த நாடகம், கவிதை, கேள்விகளை வழங்கட்டும்.

தேவனைப் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்த தேவன் எவ்வாறு வேதாகமக் கதைகளைப் பயன்படுத்தினார் என்பதையும், நற்செய்தியை பிறருக்குக் கூற கதைகள் மூலம் எவ்வாறு உதவினார் என்பதையும், சாட்சியாகக் கூறுமாறு விசுவாசிகளைக் **கேட்கவும்.**

இயேசுவின் கதைகளைப் படித்து அவற்றை நண்பர்களுக்கும் குடும்பங்களுக்கும் கூறுவது பற்றிய திட்டங்களை உறுதி செய்யவும், ஜெபிக்கவும், ஒருவருக்கு ஒருவர் ஆலோசனைகளைக் கூறவும் **இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களை அமைக்கவும்.**

**மனப்பாடம் :** யோவான் 8:12.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net